2022 ජූලි 25
2022 யூலை 25
25th July 2022

NAOSL

# 2018 අංක 19 දරණ ජාතික විගණන පනතේ 14 වන වගන්තිය ප්‍රකාරව පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන විගණකාධිපති ත්‍රෛවාර්ෂික වාර්තාව

## 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

## Triennial Report of the Auditor General presented in parliament in terms of Section 14 of the National Audit Act, No. 19 of 2018

එකොළොස් වන කාණ්ඩය - 02
பதினோராவது தொகுதி - 02
Eleventh Volume - 02

**විශ්ව විද්‍යාල, පශ්චාද් උපාධි ආයතන හා උසස් අධ්‍යාපන ආයතන**
பல்கலைக்கழகங்கள், பட்டப்பின் படிப்பு நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்
Universities, Postgraduate Institutes and Higher Education Institutes

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



**பொருளடக்கம்**

------------------


| இலக்கம் | பல்கலைக்கழகத்தின் பெயர் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | கொழும்பு பல்கலைக்கழகம் | 3 |
| 02 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 4-10 |
| 03 | மொரட்டுவ பல்கலைக்கழகம் | 11-12 |
| 04 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 12-14 |
| 05 | களனி பல்கலைக்கழகம் | 14-16 |
| 06 | ருஹுணு பல்கலைக்கழகம் | 16-21 |
| 07 | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 21-25 |
| 08 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 26-27 |
| 09 | இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 27 |
| 10 | இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் | 28-31 |
| 11 | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 31-33 |
| 12 | இலங்கை ரஜரட பல்கலைக்கழகம் | 33-38 |
| 13 | இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | 38-39 |
| 14 | இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் | 39-42 |
| 15 | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 42-44 |
| 16 | அழகியற் கலை பல்கலைக்கழகம் | 44-45 |
| 17 | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 45-46 |
| 18 | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு | 47-49 |
| 19 | கம்பகா விக்கிரமாரச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனம் | 49-50 |
| 20 | தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவனம் | 50 |
| 21 | கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவனம் | 51 |
| 22 | உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல், மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவனம் | 52 |
| 23 | மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்விக்கான தேசிய நிலையம் | 52 |
| 24 | சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் | 53-55 |
| 25 | விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 55-57 |
| 26 | மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 57 |
| 27 | இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் | 58 |
| 28 | முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் | 59-60 |
| 29 | தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம் | 60 |
| 30 | விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் | 61-63 |
| 31 | ஆங்கில மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 63-64 |
| 32 | மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் | 65-67 |

**பல்கலைக்கழகங்கள், பட்டப்பின் படிப்பு நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பிலான மூன்றாண்டு அறிக்கை –2018 - 2020**

---

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மற்றும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான 17 பல்கலைக்கழகங்களின், 10 உயர் கல்வி நிறுவனங்களின் மற்றும் 08 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கைகள் அந்தந்த ஆண்டுகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகளிடையே மனிதவள மேம்பாட்டு நிறுவனம், சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவனம் மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய 03 உயர் கல்வி நிறுவனங்களின் தொடர்ச்சியான கவனம் செலுத்த வேண்டிய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இல்லாதிருந்தமையால் அந்த 03 நிறுவனங்களை தவரி எஞ்சிய 32 நிறுவனங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டிய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகளை உள்ளடக்கி இந்த மூன்றாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

**துறை தொடர்பான பகுப்பாய்வு**

---

1870 இல் இலங்கை மருத்துவக் கல்லூரி (ஊநலடழடி ஆநனஉையட ஊழடடயபந) ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 1942 இன் 20 ஆம் இலக்க இலங்கை பல்கலைக்கழகங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கை மருத்துவக் கல்லூரி மற்றும் இலங்கை பல்கலைக்கழக கல்லூரிகளை ஒன்றிணைத்து 1942 இல் இலங்கை பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 1972 இன் 1 ஆம் இலக்க இலங்கை பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் ஆகிய அதிகாரச்சட்டங்களின் மூலம் கொழும்பு பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், மொரட்டுவை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியன தாபிக்கப்பட்டிருந்தன. இந்த அறிக்கையின் திகதி வரையிலுமான கடந்த 70 வருடங்களினுள் பிரதானமாக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் மூலம் மற்றும் சில விசேட அதிகாரச்சட்டங்களின் மூலம் 17 பல்கலைக்கழகங்கள், 10 உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் 08 பட்டப்பின் படிப்ப நிறுவனங்களை நாடு முழுவதும் தாபித்து உயர் கல்வி சந்தர்ப்பங்களை வியாபிக்க அந்தந்த காலப்பகுதிகளில் காணப்பட்ட அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இந்த அனைத்து நிறுவனங்களும் கண்காணிக்கப்படுகின்றது.

2018, 2019 மற்றும் 2020 ஆகிய 03 வருடங்களுக்கு உரிய தரவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, மேலே விபரம் குறிப்பிடப்பட்ட 17 பல்கலைக்கழகங்களின் 03 வருடங்களின் மொத்தச் செலவினம் ரூபா 167,634.52 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 82 சதவீதமான ரூபா 137,855.98 மில்லியனும் அரச மானியத்தின் ஊடாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் நீங்கலாக எஞ்சிய 16 பல்கலைக்கழகங்களினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 14,327.48 மில்லியன் நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இந்த 16 பல்கலைக்கழகங்களின் பராமரிப்புக்காக அரசினால் செலவிடப்படும் தொகை ரூபா 14,327.48 மில்லியனால் குறைத்துக்கொள்ள முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே, 10 உயர் கல்வி நிறுவனங்களின் 03 நிறுவனங்களின் மொத்த செலவினம் ரூபா 17,762.54 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் 77 சதவீதம் அல்லது ரூபா 13,705.50 மில்லியனும் அரச மானியத்தினூடாக உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், கலை மற்றும் உயர் கல்விக்கான தேசிய நிலையம் நீங்கலாக பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழு உள்ளடங்களாக எஞ்சிய 09 உயர் கல்வி நிறுவனங்களினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 687.35 மில்லியன் நீண்ட கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 09 உயர் கல்வி நிறுவனங்களின் பராமரிப்பிற்காக அரசினால் செலவிடப்பட்ட தொகையை ரூபா 687.35 மில்லியனால் குறைத்துக்கொள்ள முடியுமானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும், 08 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் 03 வருடத்திற்கான மொத்த செலவினம் ரூபா 3,937.4 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றுள் 31 சதவீதமான அல்லது ரூபா 1,242.10 மில்லியனும் அரச மானியத்தினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், ஆங்கில மொழிக்கான பட்டப்பின் படிப்பு நிறுவனம் நீங்கலாக எஞ்சிய 07 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,040.10 மில்லியன் நீண்டகால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 07 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் பராமரிப்பிற்காக அரசினால் செலவிடப்படும் தொகையை ரூபா 2,040.10 மில்லியனால் குறைத்துக்கொள்ள முடியுமானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிதியத்தை முதலீடு செய்யாமை, பிணைமுறிகளை மீறுதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை, கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரலடையாள இயந்திரங்களில் பதிவு செய்யப்படாமை, நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை ஆகியன துறைக்குரிய பொதுவான அவதானிப்புகள் என்பதும் அவதானிக்கப்பட்டது.

## 1. கொழும்பு பல்கலைக்கழகம்

| ஆண்டு | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| முதுகலை பட்டப்படிப்பு நிறைவு செய்வதற்கான சம்பளமுடைய கல்வி விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 18 பேராசியர்கள் தொடர்புடைய தகுதிகள் பூர்த்தி செய்யப்படாது மீண்டும் கடமைக்கு வருகை தந்ததன் காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய பிணை பெறுமதி ரூபா 78,241,772 ஆக காணப்பட்டது. அவ்வாறே, மீண்டும் கடமைக்கு வருகை தராத 12 பேராசியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 02 தொடக்கம் 18 ஆண்டுகளுக்கிடையேயான பழைய கூட்டுததொகை ரூபா 20,212,040 தொகை 2020 திசெம்பர் 31 திகதி வரையும் அறவிடப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்பட்ட பிரகாரம் தொடர்புடைய பெறுமதி அறவிடப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வெளிநாடு சென்று மீண்டும் கடமைக்கு வருகை தராத பேராசிரியர்களுக்கு தொடர்பான அறவிடப்பட வேண்டிய பெறுமதி அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது. | கல்விசார் விடுமுறைகளை பெற்று வெளிநாடு செல்வதற்கு இணங்கி பிணை முறிகளை மீறியமையினால் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 20 உத்தியோகத்தர் களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,791,505 தொகை அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

## 2. பேராதனைப் பல்கலைக்கழகம்

| ஆண்டு | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குரிய கெட்டம்பேயில் அமைந்துள்ள 40 பேர்ச் அளவிலான காணி 1987 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி வரை 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் திவிநெகும திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை பணம் ரூபா 7,200,000 ஆன நிலுவை குத்தகைத் தொகை மற்றும் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 வரை பெறவேண்டிய தொகை கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் திருத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் முகவரியின் கீழ் எவ்வித அனுமதி இன்றி வெளித்தரப்பினரால் பீடத்தின் கால்நடை மருத்துவமனையை மேம்படுத்துவதற்காக என குறிப்பிட்டு 2014 ஜுன் 06 ஆம் திகதி இலங்கை வங்கியின் பேராதனைக் கிளையில் சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டு 2019 யூன் 04 ஆந் திகதி வரை ரூபா 2,606,324 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,065,613 தொகை மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. பீடத்தின் ஒசுசலா வெளித்தரப்பினருக்கு வழங்கி மாதமொன்றுக்கு ரூபா 15,000 பெறப்பட்டிருந்த போதும் எஞ்சிய பணப் பெறுவனவு எந்த வகையில் | இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கும் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்னல் வேண்டும். | இது தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்பது தொடர்பான தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | | |
| (இ) | பிணை முறிகளை மீறிய 102 விரிவுரையாளர் களிடமிருந்து ரூபா 140,780,356 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் பிணை முறி மற்றும் உடன்படிக்கைகளை மீறி 01 ஆண்டு தொடக்கம் 50 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் அம்மீதிகளை அறவிடுவதற்காக முறையான நடைமுறையொன்றை பல்கலைக்கழகத்தினால் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிணை முறிகளை மற்றும் உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை முறிகளை மற்றும் உடன்படிக்கைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அவிடப்பட வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 131,871,454 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திட மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 தொகை 08 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டுப்பாட்டுச் சபையின் பரிந்துரை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நிமித்தமாகவுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,355,275 ஆன கடன் மீதியொன்று 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | பெற வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எந்தவொரு ஊழியரினதும் சம்பளமற்ற வீமுறைகள் அல்லது ஏழு வருட விடுமுறையை பெற்றுக்கொள்ளும் போது விடுமுறை வழங்குவதற்கு முன்னர் அவர்களால் செலுத்த வேண்டிய கடன் மீதியை தீர்த்த பின்னர் அவர்களுக்கு விடுமுறை வழற்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டிருந்தது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கடன் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்காக ஒப்பந்தத்திற்குரிய பொறியியலாளரின் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தக்காரரின் மதிப்பீட்டிற்கு இடையே 52 உருப்படிகளில் 30 சதவீதம் முதல் 577 சதவீதம் வரை விலகலொன்று பொறியியாளர் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 8,217,408 ஆன விலை விபரங்களைச் சமர்ப்பித்திருந்த | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதியளவில் பணிகளை நிறைவு செய்திருந்த 52 உருப்படிகள் தொடர்பில் 30 சதவீதம் முதல் 577 சதவீதம் வரையிலுமான விளைத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதும், 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.2 (க) வழிகாட்டியின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 2017 நவம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப முற்பணமாக ரூபா 14,039,397 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதாவது கால நீடிப்பின் பின்னர் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 2,135,946 ஆன செயலாற்றல் பிணையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | தளம்பல்கள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டிருக்காமை தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | மருத்துவ பீடத்தின் பட்டப்பின் மருத்துவ பீட பாடசாலை நிர்மாணத்திற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 330 மில்லியன் நிதியேற்பாகளில் ரூபா 39,703,080 தொகை மதியுரைச் சேவைகள் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய மதிப்பீடொன்றை மேற்கொண்ட பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன், வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். | தடுப்பு வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 68,270,171 தொகையான 37 மீண்டெழும் செயற்திட்டங்களுக்குரிய ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொண்டு அல்லது ஒப்பந்தக்காரருக்கு வழங்கிய கடிதங்கள் (யுறயனைபெ டுநவவநசள) வழங்கியிருக்கையில் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவற்றுடன் நிர்மாணங்களை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டங்களுடன் கைத்தொழில்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கைவிடப்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படும்ம நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், செயலாற்றல் பிணையும் காசாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பொறியியல் பீடத்தின் 07 பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளுக்காக 628 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அதற்காக ரூபா 166,550,000 ஆன பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. இருந்த போதும் அப்பாடநெறி களுக்காக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | அங்கீகாரம் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அந்த பாடநெறிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள தவறியிருந்தது. |
| (ஒ) | பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பொறியியல் வடிவமைப்பு நிர்மாண நிலையத்தின் கீழ் கடந்த 03 ஆண்டுகளில் 07 வெளித்தரப்பினருக்கு நிர்மாணம் தொடர்பான மதியுரை சேவைகள் வழங்கியிருந்த போதும் பல்கலைக்கழகத்தின் 11 நிர்மாண வேலைகளுக்காக வெளித் தரப்பினர்களிடம் இருந்து சேவைகள் பெற்று அதற்காக ரூபா 93,829,364 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | பல்கலைக்கழகத்தின் நிரமாண செயற்திட்டங்களுக் காக பொறியியல் வடிவமைப்பு நிர்மாண நிலையத்திடமருந்து மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் | இதற்காக பொறியியல் நிர்மாண நிலையத்தின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இதற்காக முறையான நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | பல்கலைக்கழக கல்வி பதவியணியினரின் ஒழுக்கம் மற்றும் கல்விப் பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 05 ஆம் பிரிவிற்கு முரணாக பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் முன்னால் பீடாதிபதி ஒருவரால் தமது மகளுக்கு ஆ.ிாை பட்டப்பின் படிப்பினை வழங்கும் போது அதன் பரிசோதனை செயற்பாடுகளுக்கும் பரீட்சை செயற்பாடுகளும் அவரினால் மேற்பார்வை செய்யப்பட்டு 2016 யூலை 12 ஆந் திகதி பட்டத்தை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார். | உரிய வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்னகாக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் உரிய எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். | ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஔ) | 2009.'.2010 கல்வியாண்டு முதல் 2012.'.2013 கல்வியாண்டு ஆண்டு வரை 4 கல்வியாண்டு களுக்காக விவசாய பீடத்திற்காக 224 மாணவர்கள் பதிவு செய்யப்படா திருந்ததுடன் அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் 20 சதமாக இருந்தது. | பல்கலைக்கழக முறைமையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க கூடிய மாணவர்களின் இயலுமையை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஈடுபடுத்தப்பட்ட மாணவ மாணவிகளை பதிவு செய்து உள்ளீர்ப்பதுடன் அந்த எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிலைமையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் 2014 முதல் 2020 வரையான 07 கல்வியாண்டுகளி ல் 344 மாணவர்களை பதிவு செய்திருக்க வில்லை. |
| (க) | 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் தொல்பொருளியல் துறையின் ஆயளவநச டுயனௌஉயிந யுசஉாநழடழபல பட்டப்படிப்பு பாடநெறியை செயற்படுத்துவதற்காக பல்கலைக் கழகத்தினால் குசநநை ருளைநசளவையவ டீநசடைெ இற்கு இடையே உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக வழங்குவதற்கு இணங்கியிருந்த 33,400 யூரோ கொடுக்கல் வாங்கல்களுக்குரிய எந்தவொரு நிதி அறிக்கை அல்லது கோவையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் செயற்திட்டத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதி முடிவடைந்து 04 ஆண்டுகள் காலமொன்று கடந்திருந்த போதும் இதுவரை பட்டப்படிப்பு நிகழ்ச்சி செயற்படுத்தப்பட்டிருக்கவி - ல்லை. | பீடங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பாக முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | பீடங்களினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் தொடர்பில் முறையான கட்டுப்பாட்டு நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளமை. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் முறையான கட்டுப்பாட்டு நடைமுறையொன் றை அறிமுகப்படுத்து வதற்கு குறித்த தகவல்களை சமர்ப்பிப்பதற்கு மற்றும் பட்ட பாடநெறியை நடைமுறைப்படுத் த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ங) | 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 7,586,873 செலவிடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்ட கலை கூடம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் விளைவற்ற வகையில் காணப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டு கட்டிடத்தை பயன்படுத்த முடியாத நிலைமையில் உட்கூரையும் பழுதடைந்து உடைந்து வீழ்ந்து காணப்பட்டது. | கட்டிட நிர்மாணத்தின் போது முறையான மதிப்பீட்டு ஒன்றுடன் உச்ச அளவில் பயன்படுத்தக்கூடிய வகையில் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தினை பயன்படுத்த முடியாதவாறு சிதைவடைந்து இருந்தது. |
| (ச) | ஜயதிலக்க விடுதியின் திருத்த வேலைகளுக்ககாக 2017 நவம்பர் 06 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அதற்காக ரூபா 14,039,397 தொகை ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தியிருந்த போதிலும் திருத்த வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு வேலைத்தளம் முற்பணம் செலுத்தி 06 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2018 மே மாதம் 03 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். | சரியான மதிப்பீடுகளின் பிரகாரம் பொருத்தமான மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்படுவதற்குரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரருக்கு வேலைத்தளத்தினை கையளிப்பதற்குள்ள இயலுமை தொடர்பில் சான்றுறுதிப் படுத்தாது அசையும் முற்பணங்களை வழங்கியமை தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் களுக்குரிய விசாரணைகளை நடாத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஞ) | விஜேவர்தன விடுதியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 240.51 மில்லியன் 2018 ஏப்ரல் 18 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 2018 மே மாதம் ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 40,017,474 தொகை செலுத்தியிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் செலுத்தி 09 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2019 பெப்ரவரி 08 ஆந் திகதியே வேலைத்தளம், கையளிக்கப் பட்டிருந்தது. | பல்கலைக் கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சரியான மதிப்பீடுகளின் பிரகாரம் போதியளவான மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரருக்கு வேலைத்தளத்தினை கையளிப்பதற்குள்ள இயலுமை தொடர்பில் சான்றுறுதிப் படுத்தாது அசையும் முற்பணங்களை வழங்கியமை தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர் களுக்குரிய விசாரணைகளை நடாத்தி தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ட) | அருணாச்சலம் விடுதியின் திருத்த வேலைகளுக்காக 2018 சனவரி 08 ஆந் திகதி ரூபா 45.18 மில்லியனிற்கு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு 2019 யூலை மாதம் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 7,102,351 தொகை செலுத்தி ஒராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் வேலையை அரம்பிப்பதற்காக ஒப்பந்தக் காரருக்கு வேலைத்தளம் கையளிக்கப் பட்டிருக்கவில்லை. | பல்கலைக் கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்மாணங்கள் போதியளவு மதிப்பீடு மற்றும் கண்காணிப்பின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சரியான மதிப்பீடுகளின் பிரகாரம் போதியளவான மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் விடுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ண) | பல்கலைக்கழகத்தின் தொலக்கல்வி மற்றும் தொடர் கல்வி கேந்திரத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2015 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 3,500,000 தொகைக்கு வெளித்தரப்பினருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அதில் ரூபா 740,000 தொகை செலுத்தி 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் குறித்த பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்ட பணிகளின் போதுமான தன்மை மற்றும் தரம் தொடர்பில் உரிய கற்கையை மேற்கொள்ளாது கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளாதிருக்கு மாறும் இணங்கிய காலச்சட்டகத்தின் பிரகாரம் நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்கின்றமை தொடர்பில் அடிக்கடி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது குறித்த பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

**3. மொரட்டுவ பல்கலைக்கழகம்**

| **ஆண்டு** | **2018** | **2019** | **2020** |
| --- | --- | --- | --- |
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | **கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதைய நிலைமை** |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா 2இ675இ341 ஆன 16 புலமை பரிசில் நிதியங்களை 03 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரை எந்தவொரு புலமைப் பரிசில்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும் | இந்த குறை பயன்பாட்டு புலமைப் பரிசில் நிதியம் தொடர்பில் விபரமாக கண்டறிவதற்கும், செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வருவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிதியம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழக கற்கைநெறிகள் மற்றும் 34 திணைக்களத்து அபிவி-ருத்தி நிதியங்களின் மொத்தம் ரூபா. 13,921,449 ஆண்டில் செயலற்று காணப்பட்டதுடன், 21 நிதியங்களின் மொத்தம் ரூபா. 6,074,585 கூட்டுத்தொகை 4 ஆண்டு காலம் தொடக்கம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிதியங்களை ஏற்புடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும். | திணைக்களத்து அபிவிருத்தி நிதியம் 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமையின் மத்தியில் பல மாதங்கள் முற்று முழுதாக மூடப்படுதலும், ஏனைய மாதங்களில் கற்கை பிரிவுகள் பூரண ஆற்றலுடன் செயற்படாமையும் காரண-மாக இந்த நிதியங்கள் 2020 ஆம் ஆண்டில் செயலற்று காணப்படுகின்றன. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிதியம் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் ஓஓ அத்தியாயத்தில் 3 (ை) | உரிய சட்டங்கள், விதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | மொத்த பல்கலைக்கழக முறைமையினுள் இந்த முறைமை பயன்படுத்தப்படுவதால், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலும் இந்த முறைமை செயற்-படுத்தப்படுகின்றது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் வருகை மற்றும் வெளிச் செல்லல்களை சான்றுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆந் திகதிய 10∴.2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து பதவியணியினரும் தமது வருகை மற்றும் வெளியேறல் கைவிரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்ய வேண்டிய போதிலும், கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாது 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 1இ459இ550இ041 சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

| **ஆண்டு** | **2018** | **2019** | **2020** |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| **கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் ஓஓ அத்தியாயத்தில் 3.1 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆந் திகதிய 10∴.2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கல்விசார் ஊழியர்களின் வருகை, வெளியேரல் மற்றும் விடுமுறை தொடர்பாக பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குழுவின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது பல்கலைக்கழக முறைமைக்கே தாக்கமளிக்கும் விடயமாகியமையினால் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். இவ் விடயம் முன்னைய ஆண்டுகளில் பொது முயற்சிகள் தொடர்பாக கூட்டக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் வருகை மற்றும் வெளிச் செல்லல்களை சான்றுப்படுத்து வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருகை வெளியேறல் உறுதி செய்யப்படுவதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குழுவில் ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியில் 6.5 ஹேக்கர் கையகப்படுத்துவதற்காக 1994 யூன் 29 ஆம் திகதி எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 74 மில்லியன் மேல் மாகாண சபைக்கு செலுத்தப்பட்டிருப்பினும், தொடர்புடைய காணி கையகப்படுத்தும் பணி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தல் வேண்டும். | தற்போது வரையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பது கையகப்படுத்தப்பட்ட பகுதிக்கு என்பதுடன் எஞ்சிய காணியை பெற்றுக்கொள்வதற்காக தொடர்சியாக கூட்டங்கள் நடத்தப்படுகின்றது என்பது. | காணிகளை சுவீகரிப்பதற்கான பணிகளை 2021 நவம்பர் மாதத்தில் முன்னாள் அமைச்சின் செயலாளர் ஒருவரி நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் காணிகளை சுவீகரிப்பதற்கு தவறியிருந்தது. |
| (இ) | பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற கல்விசார் பதவியணியில் 34 நபர்கள் மற்றும் கல்விசார்பற்ற பதவியணியில் இருவர் மீண்டும் கடமைக்கு சமூகமளிகாகத காரணத்தினால் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 19,705,186 பிணைப்பு மீறிய அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. | பிணைமுறி மீறப்பட்டமையால் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் ரூபா 17,548,926.93 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 15 உத்தியோகத்தர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 12 உத்தியோகத்தர்களுக்காக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்வதற்கும் 7 உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் பரிசில்கள் மற்றும் புலமைபரிசில் நிதிகள் 102 இன் கீழ் காணப்பட்ட ரூபா 35,527,763 இல், 98 நிதிகளின் கீழான ரூபா 32,839,003 தொடர்புடைய குறிகோளுக்காக பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | பரிசில் மற்றும் புலமைபரிசில் நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படுவதற் காக தொடர்புடைய பணம் பயன்படுத்தப்படல் வேண்டும். | புலமைபரிசில் மற்றும் பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது விசேட குறிக்கோள் அல்லது நோக்கத்திற்காகவாகும். தொடர்புடைய குறிக்கோள் மற்றும் அளவீடுகள் அடையப்படுவதற்கு முடிந்தால் மட்டும் பயன்படுத்தப்படும். இந்த ஆண்டினுள் பட்டமளிப்பு விழா நடத்தப்படாமையின் அடிப்படையிலும் இந்த நிதி குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நிதியத்தின் வருமானம் மட்டும் செலவிடப்படுகின்றதுடன் முதலீட்டு பணம் வருங்காலத்திற்கு பாராமரிக்கப்படும். | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 92 நிதியங்களின் கீழான ரூபா 32,736,328 பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**5. களனி பல்கலைக்கழகம்**

| ஆண்டு | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்வதற்காக சம்பளமற்ற கல்வி விடுமுறை மற்றம் மூலதன மானியம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 12 விரிவுரையாளர்கள் அத்தகைமையை பூர்த்தி செய்யாமல் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடடிருந்ததுடன், அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைமுறி உடன்படிக்கைகளின் பெறுமதி ரூபா 54,791,505 ஆக இருந்தது. | கலாநிதி பட்டத்தை குறித்த காலத்திற்குள் பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்தின் கல்வியின் தர் அதிகரிக்கப்பட வேண்டும். | 08 விரிவுரையாளர்கள் எதிர்காலத்தில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 04 விரிவுரையாளர்கள் கலாநிதி பட்டத்தை பூர்த்தி செய்யவில்லை என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பிணை முறி பெறுமதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | சமூக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2018 பெப்ரவரி வரையுமான காலப்பகுதியினுள் கற்கைப் பணிகளில் பங்குபற்றியிராததுடன் அவருக்கு சம்பளம் மற்றும் சகல படிகளுமாக ரூபா 6,186,190 செலுத்தப்பட்டிருந்தது. | விரிவுரைகள் நடாத்தியமைக்காக எழுத்துமூல சான்றுகள் பேணப்பட வேண்டும். | விரிவுரையாளரால் கல்வி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு பெறப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கல்விசார் பணிகளுக்கு பங்களித்துள்ளமை தொடர்பில் சான்றுப்படுத்து வதற்கு உரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளாததுடன் உரிய பணமும் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 1,971,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், ரூபா 1,232,072 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள், ரூபா 5,468,400 பெறுமதியான கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | கட்டிட வசதிகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் திட்டமிட்டவாறு கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருத்தமான இடமொன்றை துரிதமாக வழங்குவதாகவும் அதன் பின்னர் அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. |
| (ஈ) | நாடகம் மற்றும் படங்கள் கலைப் பிரிவின் கலைக்கூடத்திற்கு 2017 சனவரி 27 ஆம் திகதி கொள்வனவு செய்த ரூ.9,929,568 பெறுமதியான புகைப்படக் கருவி, தொலைக்காட்சி மற்றும் கணினி இயந்திரங்கள், 2016 ஆம் ஆண்டிலே கிடைக்கப் பெற்றிருந்த செலவினமான ரூ.4,124,830 பெறுமதியான 5 கெமராக்கள் மற்றும் 7 கணினி இயந்திரங்கள் என்பன அந்த ஆண்டுகளில் இருந்து கணக்காய்வு தினமான 2020 யூன் 26 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தாது | நிர்மாண நடவடிக்கைகளை நிறைவு செய்ததன் பின்னர் உரிய திட்டமிடலுடன் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சித்திரக் கூடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் இந்த உபகரணங்களை பயன்படுத்த திட்டமிடப் பட்டுள்ளமை. | சித்திரக்கூடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடை யாதமையால் அந்த சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. |

காணப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான நன்நெறி முறைமைக்கேற்ப மாணவர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் கற்பித்தல் அடிப்படை நோக்கமாக அமைவதனால் அனைத்து விரிவுரையாளர்களும் அடிக்கடி ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் அந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக கிடைக்கப் பெற்றிருந்த கூட்டுத் தொகை ரூ.8,096,327 பெறுமதியான 29 நிதியங்களில் நிதி ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப் பகுதிக்கு பயன்படுத்தப்படாதிருந்தது. | ஆராய்ச்சிப் பணிகளுக்காகக் கிடைக்கப் பெற்ற நிதியினைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொழிற்படு நிலையில் இல்லாத ஆராய்ச்சிகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த 29 நிதியங்களும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

**6. ரூஹுணு பல்கலைக்கழகம்**

| **ஆண்டு** | **2018** | **2019** | **2020** |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | **கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** | **நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்** | **தற்போதைய நிலைமை** |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் ஏ பகுதியின் 29(ஊ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் அல்லாத நபர்களுக்காக பல்கலைக்கழத்தில் மீதிறன் பத்திரம் ஏனைய உயிர்புடைய திறன் களைப் பெற்றுக்கொள் வதற்கு ஏற்ற விதத்தில் ஆணைக் குழுவின் இணக்கத்துடன் வெளிவாரிப் பரீட்சை நடாத்த முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த | கால ரீதியான தேவைக்கு பொருந்தக் கூடிய விதமாக பட்டப் பாடநெறிகளை அறிமுகப்படுத்து வதற்கு மற்றும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கலைமானி (வெளிவாரி) பட்டம் மாத்திரம் தற்போது வழங்கப்படுகின்றது என்பது மற்றும் பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வணிகமானி (வெளிவாரி) பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் வணிகமானி (வெளிவாரி) பட்டப் பாடநெறி ஆரம்பிப்பதற்குரிய முன்மொழிவு மாத்திரம் தயாரிக்கப் பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | போதிலும், கலைமானி வெளிவாரி பட்ட பாடநெறி தவிர ஏனைய பட்ட பாடநெறிகள் ஆரம்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | | | |
| (ஆ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் பிரிவு 40.1 இன் பிரகாரம், உயர் கல்வி நிறுவகத்தில் ஓய்வு காலங்களில் விடுமுறை பெற்று தம்மால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய சேவைக்கு பாதகமான தாக்கம் ஒன்றை ஏற்படாதவிடத்து, ஏதேனும் விரிவுரையாளர் ஒருவருக்கு ஓய்வு காலங்களில் விடுமுறை பெற்றுக்கொள்ள முடியும். பொறியியல் பீடத்தில் விரிவுரையாளர் ஒருவருக்கு கல்வி காலப் பகுதியில் அதாவது 2018 செப்தெம்பர் 06 முதல் 2018 திசெம்பர் 05 வரை மற்றும் 2019 ஜனவரி 12 முதல் 2019 ஏப்ரல் 11 திகதி வரை சம்பளத்துடன் ஓய்வு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது . எனினும் இந்தக் காலப்பகுதிகள் இரண்டும் கல்விக் காலப் பகுதிகளாகக் காணப்பட்ட துடன் தொடர்ச்சியாக 02 சந்தர்ப்பங்களில் ஓய்வு விடுமுறை பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர் களுக்கு விமுறைகள் வழங்கும் போது தாபனக் கோவையின் தேவைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். | இந்த விரிவுரையாளர் பெற்றுக்கொண்டுள்ள விடுமுறைகளை சம்பளமற்ற விடுறைகளாக கருதி செயற்படுவதற்கும், உரிய காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டுள்ள சம்பளம் மற்றும் படிகளை மீள அறவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் உரிய பணத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 நவம்பர் 26 திகதிய 15∵.2018 இலக்கங் கொண்ட பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக பதவியணியினருக்காக அக்ரஹார காப்புறுதி திட்ட முறைமை ஒன்று அறிமுகப் படுத்துவதற்காக தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதன் பிரகாரம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் ஒன்று நிறுவுவதற்கும் அதன் தவணைப் பணத்தை செலுத்துவதற்காக ஊழியர் பங்களிப்பு பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது பல்கலைக் கழகத்தின் சுயமாக உருவாக்கிய நிதியத்தின் மூலம் பயன்படுத்த வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத முறையில் பல்கலைக்கழக திரண்ட நிதியத்தில் இருந்து ரூபா 20 மில்லியன் தொகை, பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 10 மில்லியன் தொகை மற்றும் உடன்படிக்கைகளை மீறல் காரணமாக வழங்குனர்களிடம் அறவிடப்பட்ட பணத்தில் இருந்து ரூபா 10 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 40 மில்லியன் அக்ரஹார காப்புறுதி நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட வருமானங்கள் மற்றும் நிதியம் சுயமாக உருவாகிய நிதியங்கள் அல்லாததினால் அக்ரஹார காப்புறுதி நிதியம் ஒன்று ஆரம்பிப்பதற்கு பயன்படுத்த முடியாத துடன் அவற்றிற்காக குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | காப்புறுதி நிதியத்திற்காக பயன்படுத்தப்பட்ட மேற்கூறிய நிதியங்கள் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் , அவை பல்கலைக்கழகத் திற்கு திறைசேரியில் இருந்து கிடைத்த நிதியம் அல்லாததுடன் பல்கலைக் கழகத்தினால் உருவாக்கிக் கொண்ட வருமானம் என்பது. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதியத்தின் மீதியானது ரூபா 41,343,288 ஆக காணப்பட்டதுடன் 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் நிதியம் அவ்வாறே பேணிச் செல்லப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 02∴2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(ை), 4(ைை) மற்றும் 4(ைைை) ஆம் பந்திகளின் பிரகாரம் செயற்படாது பல்கலைக்கழக பதவியணியினருக்காக 2014 ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை ஆராய்ச்சி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்ளையினை விஞ்சி சுற்றறிக்கை வெளியிட முடியாத காரணத்தால் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றறிக்கை இல 02∴2014 பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி படிகளை செலுத்துவதற்கு அறவிடப்படவில்லை என்பது, அதற்காக உயர் கல்வி சுற்றிக்கை இலக்கம் 1∴2011 மற்றும் 1∴2011(ஐ) பயன்படுத்தப்பட வேண்டியிருக்க வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 05∴2014 (ஐ) ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையினால் அதன் பிரகாரம் ஆய்வு கொடுப்பனவுகள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இந்த நிலைமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொண்ட கல்விசாரா பதவியணியின் 04 உத்தியோகத்தர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் சேவையாற்றாததுடன், அந்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 858,745 ஆன ஆராய்ச்சி படிகளுக்கு உரிய ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் ஆராய்ச்சி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த உத்தியோகத்தர்கள் பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த போது ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஆராய்ச்சி படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக, அவர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்ற சந்தர்ப்பம் முதல் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டது என்ப மற்றும் இறுதி அறிக்கையை இந்த பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்க எதிரப்பார்க்கவில்லை என்பது. | 2022 சனவரி 31 ஆந் திகதியளவில் ஆராய்சி அறிக்கைகளை பெற்றுக்கொள்ள அல்லது பணத்தை மீள அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | கருவாவின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் பண்புசார் விதமாக கருவாவின் ஏற்றுமதிச் சந்தையை அதிகரித்து சிறு ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதை பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயற்திட்டம் ஒன்று தேசிய விஞ்ஞான மன்றத்தினால் | ஆய்வுகளின் தலைப்பில் அடங்கக் கூடிய விதமாக அனைத்து விடயங்களும் அடங்கும் விதத்தில் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு ஆய்வின் குறிக்கோளை நோக்கி நெருங்கு வதற்காக செயற்பட வேண்டும். தேவையினை | தேசிய விஞ்ஞான மன்றம் அந்த செயற்திட்டம் தொடர்பில் திருப்தியடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டமையால் இது பிரச்சினைக்குரிய நிலமையொன்று அல்ல என்பது. | செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது டன், 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் மிகவும் விளைவுடைய கறுவா மூலப்பொருட்கள் தொடர்பில் கறுவா விவசாயிகளுக்கு அறிவுறுத்தியிருக்க வில்லை. |

ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரதேசங்கள், கருவாவின் வகைகள் வயது மற்றும் வைப்புச் செய்யப்பட்ட காலத்தின் படி கருவாவின் இரசாயன இணைவு உயிரியல் செயற்பாட்டுத் தொகுதிகளில் மாற்றங் களை ஆய்வு செய்து மிகவும் ஆக்கபூர்வமான மூலவளங்கள் மற்றும் பிரதேசங்கள், கருவா பரித்தலுக்கு பொருத்தமான காலம், மருந்துகள் செய்வதற்கு வளர்ப்பதற்கு தேவையான வைப்புக் காலத்தின் படி மிகவும் ஆக்கபூர்வமான கருவா மூலப்பொருளை பரிந்துரைத்தல் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட காலத்தின் ¾ பகுதி முடிவடைந்திருந்த போதிலும் சமர்ப்பிக்கப் பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி டீழைஉாநஅழைஉயட ீசழகடைந உரிய ீசழகடைந 50 இல் ீசழகடைந 02 தொடர்பாக மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது. மேலும், இந்த ஆய்வு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 3,955,000 தொகை செலவிடப்பட்டு 2018 ஏப்ரல் 26 திகதி புஊ உபகரணம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டி ருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2019 திசெம்பர் 31 வரை ஆய்வு நடவடிக்கை எதற்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

இனங்கண்டு மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2007 ஆம் ஆண்டின் புத்தாக்க ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட இரு சக்கர டிரக்டரின் உரித்து கல்விசார் பிரிவு ஒன்றினது பேராசிரியரது பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டங்கள் மூலம் பெறப்படும் சொத்துக்கள் குறித்த சந்தர்ப்பத்திலேயே பல்கலைக்கழகத்தின் பெயரில் சுவீகரிக்கப் பட வேண்டும். | இந்த இரு சக்கர டிரக்டரை பல்கலைக்கழகம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வாறுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | பொறியியல் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட 04 பேராசிரியர் பதவிகளும் வெற்றிடமாக இருந்ததுடன், பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களில் 154 விரிவுரையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவின. அதில் மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், விஞ்ஞான பீடம் என்பவற்றினது வெற்றிடங்கள் முறையே 32, 23, 22 எனும் உயர் அளவில் இருந்தன. மேலும், கல்விசார் பதவியணியின் 14 கல்விசார் பதவிகள் மற்றும் கல்விசாரா பதவிகள் 156 இற்கான வெற்றிடங்கள் நிலவின. | பதவி வெற்றிடங்கள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்தின் தொலைநோக்கை அடையுமாறான மனிதவளத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொறியியல் பீட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளபோதும் அப்பீடத்தின் பேராசிரியர் பதவிகளுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம் என்பவற்றில் நிலவும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த மூல வேலைகள் நடைபெற்றவாறுள்ளன. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பொறியியல் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட 04 பேராசிரியர் பதவிகள், ஏனைய பீடங்களின் 51 பேராசிரியர் பதவிகள் மற்றும் கல்விசாரா பதவியணி பதவிநிலைத் தரங்களுக்குரிய 09 பதவிகள் மற்றும் பதவிநிலை சாராத 135 பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவியது. |

## 7. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

-------------------------------------------

| ஆண்டு | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| கணக்காய்வு அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | கணக்காய்வு அவதானிப்பு ∴ குறைபாடுகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தின் கருத்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2017 யூலை 10 ஆம் திகதிய 10∴2017 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கையின் பிரகாரம், உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை விரல்பதிவு இயந்திரத்தின் | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும். | இலங்கை பல்கலைக்கழகங்களின் கல்வசார் பதவியணியினளர் பொதுவாக வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடுவதில்லை என்பதுடன், | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் வருகை மற்றும் வெளிச் செல்லல்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூலம் உறுதிப்படுத்தாமல் பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களுக்கு 2018 ஆம் ஆண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,404 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | திணைக்களங்களின் தலைவர்களால் அவர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் அவதானிக்கப்பட்டு சான்றுபடுத்தப்படுவதாகவும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவும் இந்த தெளிவுபடுத்தலை ஏற்றுக்கொண்டுள்ளமை. | மூலம் சான்றுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | வெளிநாடுகளுக்கு புலைமைப்பரிசில் பெற்றுச் சென்ற பல்கலைக்கழகத்தின் 91 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் புலைமைப்பரிசில் காலம் முடிவடைந்த பின்னர் மீள திரும்பியோ அல்லது கடமைக்கு அறிக்கையிட்டோ இருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழகமானது 1987 ஆம் ஆண்டிலிருந்து 2019 காலப்பகுதிக்குள் உடன்படிக்கை மீறியவர்களிடமிருந்து கூட்டுமொத்தம் ரூபா 68 மில்லியன் பெறுமதியான பிணைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த விடயத்தை சீர்செய்ய தகுந்த நடவடிக்கைகள் பல்கலைக்கழக முகாமையால் எடுக்கப்பட வேண்டும். | பிணைகள் மற்றும் ஒப்பந்தங்களின் கடப்பாடுகளை மேம்படுத்த பேரவையின் வழிகாட்டலுடன் பிணை மற்றும் ஒப்பந்தக் குழுவால் பல்வேறு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன இதன் விளைவாக கடந்த காலங்களில் பிணைகளை மீறியவர்களின் எண்ணிக்கை மற்றும் நிலுவைத் தொகை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் இதற்கான சட்டத் தேவைகளை ஆராய்வதற்கான அனைத்து நடைமுறைகளையும் நெறிமுறைப்படுத்தி கொள்கைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் 88 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 61 மில்லியனை அறவிடுவதற்கு தவறியிருந்தது. |
